பயனுள்ள து’ஆக்கள் மற்றும் ’திக்ருகள் – ஓர் தொகுப்பு

مكتبة السنة والسلفية
மக்தபாஹ் அஸ்ஸுன்னாஹ்
வ ஸ் ஸ ல ஃ பி ய் யா ஹ்
மேலப்பாளையம்
salafiyyah.in

دعاء

﴿رَبَّنَا لَا تُزِغْ قُلُوبَنَا بَعْدَ إِذْ هَدَيْتَنَا وَهَبْ لَنَا مِنْ لَدُنْكَ رَحْمَةً إِنَّكَ أَنْتَ الْوَهَّابُ﴾

“எங்கள் இறைவனே! நீ எங்களுக்கு நேர் வழியைக் காட்டியபின் எங்கள் இதயங்களை (அதிலிருந்து) தவறுமாறு செய்து விடாதே! இன்னும் நீ உன் புறத்திலிருந்து எங்களுக்கு ரஹ்மத்தை அளிப்பாயாக! நிச்சயமாக நீயே பெருங் கொடையாளியாவாய்!”

(அல்குர்ஆன் 3:8)



مكتبة السنة والسلفية
மக்தபாஹ் அஸ்ஸுன்னாஹ்
வ ஸ் ஸ ல ஃபி ய் யா ஹ்
மேலப்பாளையம்

T.me/salafimaktabahmpm

دعاء

﴿ رَبَّنَآ اَفۡرِغۡ عَلَيۡنَا صَبۡرًا وَّتَوَفَّنَا مُسۡلِمِيۡنَ ﴾

எங்கள் இறைவனே! எங்கள் மீது பொறுமையைப் பொழிவாயாக! இன்னும் முஸ்லிம்களாக (உனக்கு முற்றிலும் கீழ்ப்படட்டவர்களாக) எங்கள் (உயிர்)ளைக் கைப்பற்றிக் கொள்வாயாக!

(அல்குர்ஆன் : 7:126)



مكتبة السنة والسلفية
மக்தபாஹ் அஸ்ஸுன்னாஹ்
வ ஸ் ஸ ல ஃபி ய் யா ஹ்
மேலப்பாளையம்

T.me/salafimaktabahmpm

دعاء

﴿ رَبَّنَا ظَلَمْنَآ أَنفُسَنَا وَإِن لَّمْ تَغْفِرْ لَنَا وَتَرْحَمْنَا لَنَكُونَنَّ مِنَ ٱلْخَٰسِرِينَ ﴾

"எங்கள் இறைவனே! எங்களுக்கு நாங்களே அநீதமிழைத்துக் கொண்டோம். நீ எங்களை மன்னிக்கவில்லையெனில்; எங்களுக்கு கருணை புரியவில்லையெனில் நிச்சயமாக நாங்கள் நஷ்டமடைந்தவர்களில் ஆகிவிடுவோம்"

(அல்குர்ஆன் : 7:126)



مكتبة السنة والسلفية
மக்தபாஹ் அஸ்ஸுன்னாஹ்
வ ஸ் ஸ ல ஃபி ய் யா ஹ்
மேலப்பாளையம்

T.me/salafimaktabahmpm


﴿رَبَّنَا اغْفِرْ لِي وَلِوَالِدَيَّ وَلِلْمُؤْمِنِينَ يَوْمَ يَقُومُ الْحِسَابُ﴾
"எங்களுடைய இறைவனே! என்னையும், என் பெற்றோரையும், (மற்ற) விசுவாசிகளையும் கேள்வி கணக்கு நிலைபெறும் (மறுமை) நாளில் மன்னிப்பாயாக"
அல்குர்ஆன் 14:41
مكتبة السنة والسلفية
மக்தபாஹ் அஸ்ஸுன்னாஹ்
வ ஸ் ஸ ல ஃபி ய் யா ஹ்
மேலப்பாளையம்
T.me/salafimaktabahmpm


﴿رَبِّ إِنِّي لِمَا أَنزَلْتَ إِلَيَّ مِنْ خَيْرٍ فَقِيرٌ﴾
“என் இறைவனே! என்பால் எந்த நன்மையை
நீ இறக்கி வைக்கிறாயோ நிச்சயமாக நான்
(அதற்குத்) தேவையுடையவனாக இருக்கிறேன்”
அல்குர்ஆன் 28:24
مكتبة السنة والسلفية
மக்தபாஹ் அஸ்ஸுன்னாஹ்
வ ஸ் ஸ ல ஃ பி ய் யா ஹ்
மேலப்பாளையம்
T.me/salafimaktabahmpm

﴿رَبِّ هَبۡ لِیۡ مِنۡ لَّدُنۡكَ ذُرِّيَّةً طَيِّبَةً ۚ اِنَّكَ سَمِيۡعُ الدُّعَآءِ﴾

“என் இறைவனே! உன்னிடமிருந்து எனக்காக ஒரு நல்ல சந்ததியை அளிப்பாயாக! நிச்சயமாக நீ பிரார்த்தனையைச் செவிமடுப்பவனாக இருக்கின்றாய்.”

(அல்குர்ஆன் 3:38)



مكتبة السنة والسلفية
மக்தபாஹ் அஸ்ஸுன்னாஹ்
வ ஸ் ஸ ல ஃ பி ய் யா ஹ்
மேலப்பாளையம்

T.me/salafimaktabahmpm

﴿رَبَّنَا هَبۡ لَنَا مِنۡ أَزۡوَٰجِنَا وَذُرِّيَّٰتِنَا قُرَّةَ أَعۡيُنٖ وَٱجۡعَلۡنَا لِلۡمُتَّقِينَ إِمَامًا﴾

“எங்கள் இறைவா! எங்கள் மனைவியரிடமும், எங்கள் சந்ததியரிடமும் இருந்து எங்களுக்குக் கண்களின் குளிர்ச்சியை அளிப்பாயாக! இன்னும் பயபக்தியுடையவர்களுக்கு எங்களை இமாமாக (வழிகாட்டியாக) ஆக்கியருள்வாயாக!”

(அல்குர்ஆன் 25:74)

مكتبة السنة والسلفية
மக்தபாஹ் அஸ்ஸுன்னாஹ்
வ ஸ் ஸ ல ஃ பி ய் யா ஹ்
மேலப்பாளையம்
T.me/salafimaktabahmpm

دعاء

﴿ رَبَّنَآ اٰتِنَا فِى الدُّنۡيَا حَسَنَةً وَّفِى الۡاٰخِرَةِ حَسَنَةً وَّقِنَا عَذَابَ النَّارِ ﴾

"ரப்பனா! (எங்கள் இறைவனே!) எங்களுக்கு இவ்வுலகில் நற்பாக்கியங்களைத் தந்தருள்வாயாக; மறுமையிலும் நற்பாக்கியங்களைத் தந்தருள்வாயாக; இன்னும் எங்களை (நரக) நெருப்பின் வேதனையிலிருந்தும் காத்தருள்வாயாக!"

(அல்குர்ஆன் : 2:201)

دعاء

﴿ رَبَّنَآ اِنَّنَآ اٰمَنَّا فَاغْفِرْ لَنَا ذُنُوْبَنَا وَقِنَا عَذَابَ النَّارِ ﴾

“எங்கள் இறைவனே! நிச்சயமாக நாங்கள் (உன்னை) நம்பிக்கை கொண்டோம். எனவே, நீ எங்களுக்கு எங்களுடைய பாவங்களை மன்னிப்பாயாக! நரக நெருப்பின் வேதனையிலிருந்தும் எங்களைக் காப்பாயாக!

(அல்குர்ஆன் : 3:16)



مكتبة السنة والسلفية
மக்தபாஹ் அஸ்ஸுன்னாஹ்
வ ஸ் ஸ ல ஃபி ய் யா ஹ்
மேலப்பாளையம்

T.me/salafimaktabahmpm

﴿رَبَّنَا فَاغْفِرْ لَنَا ذُنُوبَنَا وَكَفِّرْ عَنَّا سَيِّئَاتِنَا وَتَوَفَّنَا مَعَ الْأَبْرَارِ﴾

“எங்கள் இறைவனே! நீ எங்கள் குற்றங்களை மன்னிப்பாயாக! எங்களுடைய தீமைகளை எங்களை விட்டு நீக்கி விடுவாயாக! மேலும், (முடிவில்) நல்லோர்களுடன் எங்களை மரணிக்கச் செய்வாயாக”

(அல்குர்ஆன் 3:193)

دعاء

﴿ رَبَّنَا اغْفِرْ لَنَا ذُنُوبَنَا وَإِسْرَافَنَا فِيٓ أَمْرِنَا ﴾

“எங்கள் இறைவனே! எங்கள் பாவங்களையும், எங்கள் செயல்களில் நாங்கள் வரம்புமீறிய (குற்றத்)தையும் நீ எங்களுக்கு மன்னிப்பாயாக!”

(அல்குர்ஆன் : 3:147)



دعاء

﴿ رَبِّ هَبْ لِىْ حُكْمًا وَّاَلْحِقْنِىْ بِالصّٰلِحِيْنَ ﴾

என் இறைவனே! நீ எனக்கு ஹுக்மை (மார்க்கக் கல்வி மற்றும் தீர்க்கமான ஞானத்தை) அளிப்பாயாக! மேலும், நல்லோர்களுடன் என்னைச் சேர்த்து வைப்பாயாக.

﴿ وَاجْعَلْ لِّىْ لِسَانَ صِدْقٍ فِى الْاٰخِرِيْنَ ﴾

பின்வருபவர்களில் (அவர்கள் என் விஷயத்தில் என்னைப்பற்றி அழகானவற்றைக் கூற) எனக்கு நற்பெயரை ஏற்படுத்துவாயாக.

﴿ وَاجْعَلْنِىْ مِنْ وَّرَثَةِ جَنَّةِ النَّعِيْمِ ﴾

இன்பமிகு சொர்க்கத்திற்கு வாரிசானவர்களிலும் என்னை நீ ஆக்கி வைப்பாயாக!

﴿ وَلَا تُخْزِنِىْ يَوْمَ يُبْعَثُوْنَ ﴾

மேலும், "(படைப்பினங்கள் உயிர் கொடுக்கப்பட்டு) எழுப்பப்படும் (மறுமை) நாளில் நீ என்னை இழிவு படுத்தாதிருப்பாயாக!"

(அல்குர்ஆன் 26:83-85, 87)



﴿تَوَفَّنِى مُسْلِمًا وَأَلْحِقْنِى بِٱلصَّٰلِحِينَ﴾
முஸ்லிமாக என்னைக் கைப்பற்றிக் கொள்வாயாக! இன்னும் நல்லோர்களுடன் என்னை சேர்த்து விடுவாயாக!
(அல்குர்ஆன் 12:101)
مكتبة السنة والسلفية
மக்தபாஹ் அஸ்ஸுன்னாஹ்
வ ஸ் ஸ ல ஃ பி ய் யா ஹ்
மேலப்பாளையம்
T.me/salafimaktabahmpm

﴿رَبِّ ارْحَمْهُمَا كَمَا رَبَّيَانِي صَغِيرًا﴾

‘என் இறைவனே! நான் சிறுபிள்ளையாக இருந்தபொழுது (மிக்க அன்பாக) என்னை அவர்கள் வளர்த்தவாறே, நீயும் அவ்விருவருக்கும் ரஹ்மத் செய்வாயாக!”

அல்குர்ஆன் 17:24



مكتبة السنة والسلفية
மக்தபாஹ் அஸ்ஸுன்னாஹ்
வ ஸ் ஸ ல ஃபி ய் யா ஹ்
மேலப்பாளையம்

T.me/salafimaktabahmpm

﴿رَبِّ اشْرَحْ لِي صَدْرِي﴾

“என் இறைவனே! என் நெஞ்சத்தைத்
திடப்படுத்தி) விரிவாக்குவாயாக!

﴿وَيَسِّرْ لِي أَمْرِي﴾

என்னுடைய காரியத்தை எனக்கு எளிதாக்கி
வைப்பாயாக!

﴿وَاحْلُلْ عُقْدَةً مِّن لِّسَانِي﴾

என் நாவிலுள்ள முடிச்சை
அவிழ்த்தும் விடுவாயாக!

﴿يَفْقَهُوا قَوْلِي﴾

(அப்பொழுது) என் சொல்லை அவர்கள்
விளங்கிக் கொள்வார்கள்.



அல்குர்ஆன் 20 : 25 - 28

(அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள்) ஸுப்ஹு தொழுகை தொழுதால், ஸலாம் கொடுக்கும் பொழுது (ஸலாத்திற்குப் பிறகு),

اللَّهُمَّ إِنِّي أَسْأَلُكَ عِلْمًا نَافِعًا وَرِزْقًا طَيِّبًا وَعَمَلاً مُتَقَبَّلاً

"யா அல்லாஹ்! பயனளிக்கக்கூடிய கல்வி,
நல்ல வாழ்வாதாரம் மற்றும்
ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய அமல்கள்
ஆகியவற்றை உன்னிடத்தில் நான் கேட்கின்றேன்"
என்று கூறக் கூடியவர்களாக இருந்தார்கள்.

அறிவிப்பாளர்: உம்மு ஸலமா رضي الله عنها
ஸஹீஹ் இப்னிமாஜா 762

الدُّعَاء

உள்ளத்தை மார்க்கத்தில் உறுதிப்படுத்துவதற்கான து’ஆ

يَا مُقَلِّبَ الْقُلُوبِ ثَبِّتْ قَلْبِي عَلَى دِينِكَ

“உள்ளங்களைப் புரட்டக் கூடியவனே! எனது உள்ளத்தை உனது மார்க்கத்தின் மீது நிலை பெறச் செய்வாயாக‘.

அறிவிப்பாளர்:
அனஸ் பின் மாலிக் ﵁
அத்திர்மிதி 2140

நபி ﷺ அவர்கள்:

“يَا مُقَلِّبَ القُلُوب ثَبِّتْ قَلبِي عَلَى دِينِك”

“உள்ளங்களைப் புரட்டக் கூடியவனே! எனது உள்ளத்தை உனது மார்க்கத்தின் மீது நிலை பெறச் செய்வாயாக”

என்று அதிகம் (பிரார்த்தித்துக்) கூறுபவர்களாக இருந்தார்கள்.

அல்லாஹ்வின் தூதரே! உங்களையும், நீங்கள் கொண்டு வந்ததையும் நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம், நீங்கள் எங்கள் மீதா அஞ்சுகிறீர்கள்? என்று நான் கேட்டேன்.

(அதற்கு) நபியவர்கள்(ﷺ), “ஆம். நிச்சயமாக உள்ளங்கள் அல்லாஹ்வுடைய விரல்களில் இரு விரல்களுக்கு மத்தியில் உள்ளன. அவற்றை அவன் தான் நாடியவாறு புரட்டுகின்றான்” என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர்: அனஸ் رضي الله عنه

நூல்: அத்-திர்மிதி 2140

مكتبة السنة والسلفية
மக்தபாஹ் அஸ்ஸுன்னாஹ்
வ ஸ் ஸ ல ஃபி ய் யா ஹ்
மேலப்பாளையம்

T.me/salafimaktabahmpm

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் தமது சஜ்தாவில்,

"اللَّهُمَّ اغْفِرْ لِي ذَنْبِي كُلَّهُ، دِقَّهُ وجِلَّهُ، وأَوَّلَهُ وآخِرَهُ، وعَلَانِيَتَهُ وسِرَّهُ"

இறைவா! "என் பாவங்கள் அனைத்தையும் மன்னிப்பாயாக! அவற்றில் சிறியதையும் பெரியதையும், ஆரம்பமாகச் செய்ததையும் இறுதியாகச் செய்ததையும், வெளிப்படையாகச் செய்ததையும் மறைமுகமாகச் செய்ததையும் மன்னிப்பாயாக", என்று பிரார்த்திப்பவராக இருந்தார்கள்.

அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா رضي الله عنه

நூல்: ஸஹீஹ் முஸ்லிம்: 483

الدُعَاء

اللَّهُمَّ مُصَرِّفَ الْقُلُوبِ صَرِّفْ قُلُوبَنَا عَلَى طَاعَتِكَ

"யா அல்லாஹ்! உள்ளங்களை திருப்பக்கூடியவனே, எங்களது உள்ளங்களை உனக்கு கீழ்ப்படிவதின் பக்கம் திருப்புவாயாக"

ஸஹீஹ் முஸ்லிம் 2654

الدُعَاء

اللهمَّ إنِّي أَعُوْذُ بِكَ مِنْ مُنْكَرَاتِ الأَخْلَاقِ والْأَعْمَالِ وَالْأَهْوَاءِ وَالْأَدْوَاءِ

யா அல்லாஹ்!

தீய குணங்கள், தீய செயல்கள், மனோ இச்சைகள் மற்றும் நாள்பட்ட நோய்களை விட்டும் உன்னிடத்தில் திட்டமாக நான் பாதுகாப்பு தேடுகின்றேன்.

அறிவிப்பாளர்: குத்பா பின் மாலிக் (رضي الله عنه)

ஸஹீஹுல் ஜாமிஃ 1298

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள்

اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنْ عِلْمٍ لَا يَنْفَعُ، وَمِنْ قَلْبٍ لَا يَخْشَعُ،
وَمِنْ نَفْسٍ لَا تَشْبَعُ، وَمِنْ دَعْوَةٍ لَا يُسْتَجَابُ لَهَا

"யா அல்லாஹ்! பயனளிக்காத கல்வியை விட்டும், பணிவடையாத/அஞ்சாத உள்ளத்தை விட்டும், திருப்தியடையாத நஃப்ஸை விட்டும், பதிலளிக்கப்படாத துஆவை விட்டும் உன்னிடத்தில் பாதுகாப்பு தேடுகின்றேன்" என (து'ஆ) கேட்கக்கூடியவர்களாக இருந்தார்கள்.

அறிவிப்பாளர்: ஸைத் பின் அர்கம் رضي الله عنه
ஸஹீஹ் முஸ்லிம் 2722

அல்லாஹ்றவுடைய தூதர் ﷺ அவர்களின் பிரார்த்தனைகளிலிருந்து உள்ளதாவது,

اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنْ زَوَالِ نِعْمَتِكَ، وَتَحَوُّلِ عَافِيَتِكَ، وَفُجَاءَةِ نِقْمَتِكَ، وَجَمِيعِ سَخَطِكَ

“யா அல்லாஹ்! உனது அருட்கொடை என்னிடமிருந்து சென்று விடுவது, நீ (எனக்கு வழங்கிய) முழுமையான ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு மாறிவிடுவது, உனது திடீர் வேதனை (என்னை அடைவது), மற்றும் உனது கோபத்தை பெற்றுத்தரும் அனைத்து (காரணங்கள்) ஆகிவற்றை விட்டும் உன்னிடம் நான் பாதுகாவல் தேடுகின்றேன்” என்பதாகும்.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் உமர் رضي الله عنه

ஸஹீஹ் முஸ்லிம் 2739

ஒரு மனிதர் (நபி ﷺ அவர்களிடம்) வந்து, “அல்லாஹ்வின் தூதரே! என்னுடைய இறைவனிடத்தில் (பிராத்தித்துக்) கேட்கும் போது நான் எவ்வாறு கேட்க வேண்டும்?” என்று கேட்டார்.

اللَّهُمَّ اغْفِرْ لِي وَارْحَمْنِي وَعَافِنِي وَارْزُقْنِي

“யா அல்லாஹ்! என்னை மன்னிப்பாயாக, எனக்கு ரஹ்மத் செய்வாயாக, எனக்கு முழுமையான ஆரோக்கியமும், பாதுகாப்பும் அளிப்பாயாக, மேலும் எனக்கு வாழ்வாதாரம் அளிப்பாயாக“ எனக் கேளுங்கள் என்று கூறிவிட்டு, (தனது) கட்டை விரலைத் தவிர மற்ற நான்கு விரல்களையும் சேர்த்து, “நிச்சயமாக இந்த நான்கும் உனது உலக மற்றும் மறுமையின் (அனைத்து நலவுகளையும்) உனக்கு ஒன்று சேர்க்கும்” என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர்: தாரிக் பின் அஷ்யம் அல்அஷ்ஜஈ رضي الله عنه
இப்னு மாஜா 3845

الدعاء

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள்,

اللَّهُمَّ أَصْلِحْ لي دِينِي الَّذِي هُوَ عِصْمَةُ أَمْرِي ، وَأَصْلِحْ لي دُنْيَايَ الَّتِي فِيهَا مَعَاشِي ، وَأَصْلِحْ لي آخِرَتِي الَّتِي فِيهَا مَعَادِي وَاجْعَلِ الْحَيَاةَ زِيَادَةً لي فِي كُلِّ خَيْرٍ ، وَاجْعَلِ الْمَوْتَ رَاحَةً لي مِنْ كُلِّ شَرٍّ

“யா அல்லாஹ்! எனது காரியங்களுக்கு பாதுகாப்பாக இருக்கின்ற என்னுடைய மார்க்கத்தை எனக்கு சீர்படுத்துவாயாக, எனது வாழ்வாதாரம் இருக்கின்ற என்னுடைய இம்மையை எனக்கு சீர்படுத்துவாயாக, எனது திரும்புதல் இருக்கின்ற என்னுடைய மறுமையை எனக்கு சீர்படுத்துவாயாக, (இவ்வுலகின்) வாழ்க்கையை எனக்கு ஒவ்வொரு நலவிலும் அதிகரிக்கக் (காரணமாக) ஆக்கி வைப்பாயாக, மேலும் மரணத்தை எனக்கு ஒவ்வொரு தீங்கிலிருந்தும் விடுபடக்கூடிய இளைப்பாறுதலாக ஆக்கி வைப்பாயாக“ எனக் கூறக்கூடியவர்களாக இருந்தார்கள்.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா رضي الله عنه
ஸஹீஹ் முஸ்லிம் 4903

تَزْكِيَةُ النَّفْس

உள்ளத்தைப் பரிசுத்தப்படுத்துவதற்கான து’ஆ

اللَّهُمَّ آتِ نَفْسِي تَقْوَاهَا، وَزَكِّهَا أَنْتَ خَيْرُ مَنْ زَكَّاهَا،

أَنْتَ وَلِيُّهَا وَمَوْلَاهَا

’’யா அல்லாஹ்! என்னுடைய நஃப்ஸிற்கு அதற்குரிய தக்வாவை வழங்குவாயாக, மேலும் அதனைப் பரிசுத்தப்படுத்துவாயாக. நீயே பரிசுத்தப்படுத்துபவர்களில் மிக சிறந்தவன், மேலும் நீயே அதனுடைய பாதுகாவலனும், அதனுடைய பொருப்பாளானுமாவாய்.

அறிவிப்பாளர்: ஸைத் பின் அர்கம் رضي الله عنه

ஸஹீஹ் முஸ்லிம் 2722

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

سُبْحَانَ اللهِ وبِحَمْدِهِ

எவரொருவர் "ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி" (அல்லாஹ்வை போற்றி புகழ்ந்து அனைத்து குறைகளிலிருந்தும் அவனை தூய்மைப்படுத்துகின்றேன், அவனுக்கே முழு பரிபூரணத்தவம் உண்டு) என்று ஒரு நாளில் நூறு முறைக் கூறுவாரோ, அவருடைய பாவங்கள் அழிக்கப்படும்; அது கடலின் நுரைப் போன்று (மிகுதியாக) இருந்தாலும் சரியே!

அறிவிப்பாளர்: அபூஹுரைரா رضي الله عنه
ஸஹீஹுல் புகாரி 6405

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

سُبْحَانَ اللهِ وَبِحَمْدِهِ

எவரொருவர் காலையை அடையும்போதும், மாலையை அடையும்போதும் "ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி" (அல்லாஹ்வை அனைத்து குறைகளிலிருந்தும் தூய்மைப்படுத்துகின்றேன், அவனுக்கே முழு பரிபூரணத்தவம் உண்டு) என்று நூறு முறை கூறுவாரோ, அவர் கொண்டு வந்ததைவிட சிறந்த ஒன்றை மறுமை நாளில் எவரும் கொண்டுவரவில்லை; அவரைப் போன்று கூறிய அல்லது அதை விட அதிகப்படுத்திய ஒருவரைத் தவிர.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா رضي الله عنه
ஸஹீஹ் முஸ்லிம் 2692

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

இரண்டு வார்த்தைகள், நாவின் மீது இலேசானவை, மீஸான் தராஸில் கனமானவை, அர்ரஹ்மானிற்கு விருப்பமானவை:

سُبْحَانَ اللهِ وبِحَمْدِه
ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி,

سُبْحَانَ اللهِ الْعَظِيْم
ஸுப்ஹானல்லாஹில் அ'தீம்

அல்லாஹ்வை போற்றி புகழ்ந்து அனைத்து குறைகளிலிருந்தும் அவனை தூய்மைப்படுத்திகின்றேன், அவனுக்கே முழு பரிபூரணத்தவம் உண்டு.

மிகப் பெரியவனான அல்லாஹ்வை அனைத்து குறைகளிலிருந்தும் தூய்மைப்படுத்திகின்றேன், அவனுக்கே முழு பரிபூரணத்தவம் உண்டு.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா رضي الله عنه
ஸஹீஹ் முஸ்லிம் 2694

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

سُبْحَانَ اللهِ

وَالْحَمْدُ لِلَّهِ،

وَلَا إِلَهَ إِلَّا اللهُ،

وَاللهُ أَكْبَرُ

ஸுப்ஹானல்லாஹ், வல்ஹம்துலில்லாஹ், வலா இலாஹ இல்லல்லாஹ், வல்லாஹு அக்பர்

(அல்லாஹ்வை அனைத்து குறைகளிலிருந்தும் தூய்மைப்படுத்துகின்றேன், அவனுக்கே முழு பரிபூரணத்துவம் உண்டு, அல்லாஹ்விற்கே அனைத்து புகழும், அவனையன்றி வணக்கத்திற்குரிய வேறு இறைவன் இல்லை, அல்லாஹ் மிகப் பெரியவன்) என்று நான் கூறுவது, சூரியன் எதன்மீது உதிக்கின்றதோ அதைவிட (உலகத்திலுள்ள அனைத்தையும் விட) எனக்கு மிக விருப்பமானதாகும்.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா رضي الله عنه
ஸஹீஹ் முஸ்லிம் 2695

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ، وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِيرٌ

எவரொருவர் **“லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீக லஹு லஹுல் முல்க் வலஹுல் ஹம்து வஹுவ ‘அலா குல்லி ஷையின் கதீர்”** (அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரிய வேறு இறைவன் இல்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணையில்லை, அவனுக்கே ஆட்சியதிகாரம் உரியது, அவனுக்கே அனைத்து புகழும் உரியது, அவன் ஒவ்வொரு பொருளின் மீதும் பேராற்றல் உடையவன்) என்று ஒரு நாளில் நூறு முறை கூறுவாரோ,

அவருக்கு பத்து அடிமைகளை விடுதலை செய்ததற்கு இணையான நன்மையுண்டு, அவருக்கு நூறு நன்மைகள் எழுதப்படும், அவரிடமிருந்து நூறு தீமைகள் அழிக்கப்படும், அவர் மாலைப்பொழுதை அடையும் வரை அவருடைய அந்த நாளில் ஷைத்தானிடமிருந்து அது அவருக்கு பாதுகாப்பாக இருக்கும், அவர் கொண்டு வந்ததைவிட சிறந்த ஒன்றை வேறெவரும் கொண்டு வரவில்லை; அவரைவிட அதிகமாக அமல் செய்த (அவரைவிட அதிகப்படியாக கூறிய) ஒருவரைத் தவிர.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா رضي الله عنه
ஸஹீஹுல் பு‘காரி 3293